නීතිපති දෙපාර්තමේන්තුව

சட்டமா அதிபதி திணைக்களம்

Attorney General's Department

කාර්ය සාධන වාර්තාව - 2014

Performance Report - 2014

செயலாற்றுகை அறிக்கை - 2014

நோக்கு

- இலங்கை அரச சேவையின் முதன்மைச் சேவையாக இருப்பதுடன் இலங்கையையும் அதன் மக்களின் நலனையும் கருத்திற்கொண்டு நீதிநெறியினை வினைத்திறனுடன் வழங்குதல்.

குறிக்கோள்

- இலங்கை அரசாங்க மற்றும் அரச நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்கு நிபுணத்துவ சட்டசேவைகளையும் மதியுரைகளையும் வழங்கி அரசாங்கத்தின் பரந்துபட்ட குறிக்கோள்களை நடாத்துவதற்கு முக்கிய பங்கை வகித்தல்.

செயல் நோக்கு

- இலங்கை மக்களுக்கு மிகச் சிறப்பான முறையில் சேவை செய்வதுடன் இலங்கையின் சத்தியத்தை பூர்த்தி செய்வதற்கு நன்மதிப்புடனும் கண்ணியத்துடனும் ஒருமைப்பாட்டுடனும் செயல்படுவோம்.

- சமூக மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி, சம வாய்ப்பு மற்றும் பொறுமை என்பவற்றை ஊக்குவிப்பதற்கும் இலங்கை மக்களுக்கு நீதி, பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்தை உறுதி செய்து நேர்மையான மற்றும் சுதந்திரமான முறையில் இலங்கையில் சட்டத்தை அமுல்படுத்தவும் சட்டமா அதிபர் திணைக்களம் பெரும் முயற்சி செய்யும்.

பொருளடக்கம்

உள்ளடக்கம்	**பக்க எண்**
1. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பின்னணி	3
2. சட்டமா அதிபர் திணைக்களத்தின் நிறுவன நோக்கு	4
3. ஆளணி விபரம்	5
4. சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள்	6
I. குற்றவியல் வழக்கு பிரிவு	7-18
II. சிவில் பிரிவு	
III. அரச சட்டத்தரணிகள் பிரவு	
IV. உயர் நீதிமன்ற பிரிவு	
V. கூட்டுத்தாபனப் பிரிவு	
VI. சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு	
VII. பொதுமக்கள் மனுப் பிரிவு	
• வழக்குப் பிரிவுகளின் செயல் நிறைவேற்றம் சுருக்கமாக	14
VIII. நிறுவனப் பிரிவு	15-17
IX. கணக்கு பிரிவு	18

சட்டமா அதிபர் திணைக்களம்
(த.பெட்டி இல : 502, கொழும்பு 12.)

1. பின்னணி

சட்டமா அதிபர், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சார்பாக தோன்றும் தலைமைச் சட்ட அலுவலர் என்பதுடன் திணைக்களத்தின் தலைவராகவும் பொறுப்புக் கூறும் உத்தியோகத்தராகவும் கடமையாற்றுகின்றார். சட்டமா அதிபர் திணைக்களமானது "ஏ" வகுப்பு திணைக்களம் என்பதுடன் நீதி அமைச்சின் கண்காணிப்பின் கீழ் வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களமானது, மத்திய அரசு, மாகாண சபைகள், அரச திணைக்களங்கள், நியதிச் சட்டச் சபைகள் மற்றும் அரை அரச நிறுவனங்களுக்கு சட்ட உதவியை வழங்கி வருகின்றது. திணைக்களத்தின் சட்ட உத்தியோகத்தர்கள், சிவில், குற்றவியல், அரசியலமைப்பு மற்றும் வர்த்தக விடயங்களில் அரச மற்றும் அரச சார்பான நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் இலங்கையிலுள்ள உயர்நீதிமன்றம், ஏனைய நீதிமன்றங்கள், தொழில் நியாய சபைகள் என்பவற்றில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்கள் சார்பாகத் தோன்றுவர்.

சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளுக்காக திணைக்களத்தில் முறையே சிவில் பிரிவு குற்றவியல் பிரிவு மற்றும் அரச சட்டத்தரணிகள் பிரிவு ஆகிய மூன்று அலகுகள் தாபிக்கப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தில் சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் நிருவாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தாபனப் பிரிவும் கணக்குப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன. இவ் அலகுகளுக்கு மேலதிகமாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் செயற்பாடுகள் முறையாக நடைபெறுவதற்கு கூட்டுத்தாபனப் பிரிவு, அவசரகால சட்டம் மற்றும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தில் கீழ் தொடரப்படும் வழக்குகள் சம்பந்தமாக தொழிற்படும் ஈஈஆர் பிரிவு, சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு, குடிவரவு மற்றும் குடியகல்வுப் பிரிவு, பொதுமக்கள் மனுப் பிரிவு மற்றும் உயர்நீதிமன்ற பிரிவு, ஆகியன சட்டமா அதிபர் திணைக்களத்தினுள் செயற்படுகின்றது.

2. சட்டமா அதிபர் திணைக்களத்தின் அமைப்பாண்மை கட்டமைப்பு.



3. 2014 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதி அன்று ஆளணித்தகவல்கள்

தரக்குழு	பதவிப் பெயர்	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி			தற்போதுள்ள ஆளணி		
		நிரந்தரம்	அமயம்	ஒப்பந்தம்	நிரந்தரம்	அமயம்	ஒப்பந்தம்
சிரேஷ்ட நிலை	சட்டமா அதிபர்	1	-	-	1	-	-
	மன்றாடியார் அதிபதி	1	-	-	1	-	-
	சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் அதிபதி	2			2		
	மேலதிக மன்றாடியார் அதிபதி	9	-	-	9	-	-
	சிரேஷ்ட பிரதி மன்றாடியார் அதிபதி	9	-	-	0	-	-
	பிரதி மன்றாடியார் அதிபதி	19	-	-	28	-	-
	சிரேஷ்ட அரச சட்டவாதி	56			41		
	அரச சட்டவாதி /தற்காலிக பதில் அரச சட்டவாதி	118	-	-	74	-	-
	உதவி அரச சட்டவாதி (தகதிகான்)		130			0	
	சிரேஷ்ட அரச சட்டத்தரணி	1	-	-	1	-	-
	அரச சட்டத்தரணி	2			2		
	சிரேஷ்ட உதவி அரச சட்டத்தரணி	6	-	-	6	-	-
	உதவி அரச சட்டத்தரணி	18	-	-	7	-	-
	கணிஷ்ட உதவி அரச சட்டத்தரணி	28			0		
	பணிப்பாளர் (நிதி)	1	-	-	1	-	-
மூன்றாம் நிலை	நிருவாக உத்தியோகத்தர்	3	-	-	3	-	-
	நூலகர் (அதிஉயர்தரம்)	1	-	-	1	-	-
	மொழி பெயர்ப்பாளர்	8	-	-	6	-	-
இரண்டாம் நிலை	புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர்	1	-	-	0	-	-
	வரவு செலவு திட்ட உதவியாளர்	1	-	-	1	-	-
	நூலகர்	4	-	-	1	-	-
	பொது முகாமைத்துவ உதவியாளர்	130	-	-	94	-	-
	இணைப்புச் செயலாளர்	1	-	-	1	-	-
	பிரத்தியேக செயலாளர்	1	-	-	0	-	-
	சுருக்கெழுத்தாளர்	28	-	-	0	-	-
அரம்ப நிலை	சாரதி	87	-	-	77	-	-
	கே.கே.எஸ்.	139	-	5	130	-	5
	காவளாளி	7	-	-	0	-	-

4. சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகள்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் கடமைகளை பின்வருமாறு சுருக்கமாக கூறலாம்.

- சிவில், குற்றவியல், அரசியலமைப்புச் சட்டம், வர்த்தகம் போன்ற விடயங்கள், சர்வதேச சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான விடயங்கள் என்பன தொடர்பாக அரசாங்கத்திற்கும் அரச நிறுவனங்களுக்கும் அறிவுருத்தல்கள் வழங்கல்.
- உயர் நீதிமன்றம், ஏனைய நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபைகளில் தொடரப்பட்ட வழக்குகளில் அரசாங்கம் மற்றும் அரச நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தல்.
- புதிய சட்டங்களை சட்டவாக்கம் செய்யும் போதும் நடைமுறையிலுள்ள சட்டங்களைத் திருத்தும் போதும் தேவையான சட்ட ஆலோசனைகளை வழங்குதல்.

சட்ட உத்தியோகத்தர்கள் மேற்கூறப்பட்ட கடமைகளை மேற்கொள்வதற்கு திணைக்களத்தின் பின்வரும் பிரிவுகள் உதவுகின்றன.

- ➢ குற்றவியல் பிரிவு
- ➢ சிவில் பிரிவு
- ➢ அரச சட்டத்தரணிகள் பிரிவு
- ➢ உயர் நீதிமன்றப் பிரிவு
- ➢ கூட்டுத்தாபனப் பிரிவு

மேலும் திணைக்களத்தின் தங்குதடையின்றிய செயற்பாடுகளுக்கு சிறப்பாக இங்காணப்பட்ட பொறுப்புக்களையுடைய சிறப்புப் பிரிவுகள் உள்ளன.

- ➢ பொதுமக்கள் மனு அலகு (இப்பிரிவு மக்கள் மனுக்கள் தொடர்பில் வழக்குகளை கையாளும்)
- ➢ சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு (இப்பிரிவு, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்கு தாபிக்கப்பட்டுள்ளது)

மேற்கூறப்பட்ட பிரிவுகளும் அலகுகளும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் முக்கிய செயற்பாடுகளை கையாளுகின்றன. அத்துடன் இத்திணைக்களத்தின் நிருவாக நடவடிக்கைகளுக்காக கணக்குப் பிரிவும் தாபனப் பிரிவும் தாபிக்கப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகளை பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

i. குற்றவியல் பிரிவு

இப்பிரிவிற்கு, உயர்நீதிமன்றம் அல்லது நீதவான் நீதிமன்றங்களில் குற்றவியல் வழக்கு தொடர்வதற்கும் மற்றும் ஆலோசனைக்கும் நீதவான் நீதிமன்றத்திலிருந்தோ அல்லது பொலிஸ் திணைக்களத்திலிருந்தோ நேரடியாக பெருமளவிலான குற்றவியல் வழக்குகள் கிடைக்கப் பெறுகின்றன.

மேற்கூறப்பட்ட வழக்குகளின் பிரதிகள் கிடைக்கப் பெற்றதும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் கோவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த செயற்பாட்டில் சந்தேக நபருக்கு எதிராக நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரவோ அல்லது சாட்சியங்கள் தேவையான அளவு இல்லாத போது சந்தேக நபரை சட்ட நடவடிக்கைகளில் இருந்து விடுதலை செய்யவோ அல்லது மெல் நீதிமன்றங்களுக்கு நேரடியாக குற்றப்பகர்வு பத்திரங்கள் அனுப்பிவைக்கப்படும். குற்றவியல் பிரிவில் 86 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன், இலங்கையிலுள்ள ஒவ்வொரு மேல் நீதிமன்றத்திலும் குற்றவியல் பிரிவிலுள்ள உத்தியோகத்தர் ஒருவர் இணைக்கப்பட்டுள்ளார்.

குற்றங்களின் தன்மைக்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்ட விடயங்கள்

CR1	-	குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தினால் புலனாய்வு செய்யப்பட்ட வழக்குகள்.
CR2	-	தேர்தல் தொடர்பான குற்றங்களும் கொழும்பு மோசடிப் பணியகம்.
CR3	-	அபாய ஔடத குற்றங்கள்
CR4	-	கடன் அட்டை தொடர்பான குற்றங்கள்
OW	-	தீங்கு விளைவிக்கும் ஆயுதங்கள் சட்டத்தின் கீழான குற்றங்கள்
EER/TR	-	அவசரகால ஒழுங்குவிதிகள் சட்டத்தின் கீழான குற்றங்கள்
AG/T	-	பொலிஸ் கட்டுக்காவலின் போது சித்திரவதை
I&E	-	குடிவரவு மற்றும் குடியகல்வுச் சட்டத்தின் கீழான குற்றங்கள்
MTA	-	மரணத்தை விளைவித்த விபத்துகள் தொடர்பான வழக்குகள்

மாகாண அடிப்படையில் வகுக்கப்பட்ட விடயங்கள் பழைய வகுப்பீடு.

(2010.12.31ஆம் திகதி வரையில் திறக்கப்பட்ட கோப்புகள்

CM1, CM2, CM3, CW1, CW2, CW3, CW4, CB1, CB2, CS1, CS2, CN

திணைக்களத்தின் வினைத்திறனான செயற்பாட்டிற்கும் மாகாண மட்டத்தில் கோப்புக்களை அடையாளம் காண்பதை உறுதி செய்வதற்கும் 2011.01.01 ஆம் திகதி முதல் கீழே குறிப்பிட்டுள்ளவாறு குற்றவியல் கோப்புக்கள் புதிய முறையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

EP1, EP2, EP3, EP4, NP1, NP2, NP3, NP4, NCP1, NCP2, SP1, SP2, SP3, SP4, SP5, CP1, CP2, CP3, NWP1, NWP2, NWP3, NWP4, UP1, UP2, SGP1, SGP2, SGP3, WP1, WP2, WP3, WP4, WP5, WP6, MLA

குற்றவியல் பிரிவின் செயலாற்றுகை அறிக்கை – குற்றவியல் பிரிவு (2014.01.01 முதல் 2014.12.31 வரை)

தொடர் இல	விடயம்	திறக்கப்பட்ட கோவைகள்	குற்றப்பகர்வு செய்யப்பட்ட கோப்புக்கள்	ஆலோசனை வழங்கப்பட்ட கோப்புக்கள்	விடுவிக்கப்பட்ட கோப்புக்கள்	முடிவுற்ற கோப்புக்கள்	எஞ்சியிருக்கும் கோப்புகள்
1	**CR 1**	336	56	52	37	115	1310
2	**CR2**	87	7	31	11	47	433
3	**CR3**	1494	581	403	17	1001	1198
4	**CR4**	17	3	0	0	3	79
5	**CM1**	0	19	10	6	33	194
6	**CM2**	0	19	16	19	51	122
7	**CM3**	0	21	21	19	49	211
8	**CW1**	0	19	6	9	34	123
9	**CW2**	0	24	29	27	63	139
10	**CW3**	0	14	7	9	17	137
11	**CW4**	0	14	2	1	14	138
12	**CB1**	0	17	8	15	33	60
13	**CB2**	0	25	28	13	49	72
14	**CS1**	0	20	12	22	43	219
15	**CS2**	0	21	7	16	31	170
16	**OW**	357	475	31	172	543	234
17	**AG/T**	0	5	0	0	0	5
18	**I&E**	251	0	146	64	210	287
19	**CN**	0	18	35	37	73	49
20	**EER**	65	14	23	15	52	81
21	**TR**	5	2	0	4	6	17
மொத்தம்		**2612**	**1374**	**867**	**513**	**2467**	**5278**

முன்னேற்ற அறிக்கை – குற்றவியல் பிரிவு – (2014.01.01 முதல் 2014.12.31 வரை) புதிய வகைப்படுத்தலின் கீழ்.

தொடர் இல	விடயம்	திறக்கப்பட்ட கோவைகள்	குற்றப்பகர்வு செய்யப்பட்ட கோவைகள்	ஆலோசனை வழங்கப்பட்ட கோவைகள்	விடுவிக்கப்பட்ட கோவைகள்	முடிவுற்ற கோவைகள்	எஞ்சியிருக்கும் கோப்புகள
1	**EP1**	65	10	5	8	20	156
2	**EP2**	46	8	6	4	16	105
3	**EP3**	36	7	4	7	16	47
4	**EP4**	38	4	2	2	11	89
5	**NP1**	40	6	7	7	17	106
6	**NP2**	65	10	10	10	24	122
7	**NP3**	11	1	2	0	3	9
8	**NP4**	27	3	1	2	4	34
9	**NCP1**	108	45	21	16	78	208
10	**NCP2**	47	26	7	10	42	122
11	**SP1**	101	35	15	7	54	302
12	**SP2**	95	14	6	6	21	245
13	**SP3**	132	24	9	12	41	295
14	**SP4**	56	17	9	10	29	156
15	**SP5**	49	21	1	7	19	136
16	**CP1**	211	65	88	59	195	231
17	**CP2**	56	31	17	12	55	44
18	**CP3**	63	28	23	5	53	79
19	**NWP1**	237	54	18	19	91	431
20	**NWP2**	81	13	6	4	23	142
21	**NWP3**	34	9	2	4	15	59
22	**NWP4**	67	19	12	8	39	105
23	**UP1**	106	16	20	9	39	266
24	**UP2**	54	29	13	20	56	199
25	**SGP1**	95	64	24	16	97	261
26	**SGP2**	78	40	13	11	55	128
27	**SGP3**	126	77	25	4	102	193
28	**WP1**	260	43	19	26	83	758
29	**WP2**	63	15	5	6	23	198
30	**WP3**	158	45	16	14	68	266
31	**WP4**	115	20	11	11	36	218
32	**WP5**	57	17	3	12	32	137
33	**WP6**	107	20	17	9	46	138
மொத்தம்		**2884**	**836**	**437**	**357**	**1503**	**5985**

ii சிவில் பிரிவு

இலங்கையின் உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேன் முறையீடுகள், ரிட் ஆணைகள், மீள் நோக்குகை வழக்குகள், நாட்டின் பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் சிவில் வழக்குகள் என்பன உட்பட அனைத்து சிவில் மற்றும் வர்த்தக வழக்குகள் என்பன தொடர்பில் சிவில் பிரிவு பங்கேற்கும் சட்டங்களைத் திருத்துதல், புதிய சட்டங்களை அங்கீகரித்தல் போன்ற பணிகள் தொடர்பில் அறிவுரைகள் வழங்கலும் மேற்கொள்ளப்படுதலும் பாராளுமன்றத்தில் குறித்த நடவடிக்கைகளில் கலந்துகொண்டு அலோசனை வழங்கபடும். அரச திணைக்களங்களுக்கு அறிவுரைகள் வழங்குதல், வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கான அறிவுரைகள் வழங்குதல், மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வினவப்படுகின்ற விடயங்கள், வழக்குத் தொடரும் அறிவிப்புக்கள் தொடர்பான வழக்குகள், நடுத்தீர்ப்பு வழக்குகள், காணிச் சுவீகரிப்பு வழக்குகள், அரச காணிகளின் உரிமையைப் பெறுவது தொடர்பான வழக்குகள் ஆகியன சிவில் பிரிவின் உத்தியோகத்தரினால் கையாளப்படும் வழக்கு நடவடிக்கைகளில் சிலவாகும்.

மேன்முறையீட்டு நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றங்கள், மாகாண சிவில் மேன் முறையீட்டு மேல் நீதிமன்றங்கள் மற்றும் தொழில் நியாய சபையிலுள்ள சிவில் விடயங்களை கையாள்வதற்கு சிவில் பிரிவில் 74 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் வேலைக்கு மேலதிகமாக, இவ் உத்தியோகத்தர்கள் சட்டப் பிரச்சனைகளில் அரச திணைக்களங்களுக்கு ஆலோசனை வழங்குதல், பல்வேறு தொழில் நுட்பக் குழுக்களில் பங்கேற்றல், உள்ளூர் மற்றும் சர்வதேச நடுத்தீர்ப்புகளுக்கு தோன்றுதல், மற்றும் சர்வதேச தவறு செய்கின்ற சட்டவல்லுறவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒழுக்காற்று விடயங்களில் உயர்நீதிமன்றில் தோன்றுதல் போன்ற விடயங்களிலும் ஈடுபடுகின்றனர்.

சிவில் பிரிவில் வகுப்பீடு செய்யப்பட்ட விடயங்கள்

E	-	சட்ட ஆலோசனை
FC	-	வெளிநாட்டு கடன்கள் பெறுவதற்கான ஆலோசனை
CA/CA	-	மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள்
CA/HC	-	மேல் நீதிமன்ற வழக்குகள்
HRC	-	மனித உரிமைகள் ஆணைக்குழு விடயங்கள்
B	-	சட்டமூலங்கள்
CA/NA	-	வழக்கறிவித்தல்
CA/DC	-	மாவட்ட நீதிமன்ற வழக்குகள்
ARB	-	நடுத்தீர்ப்பு வழக்குகள்
C	-	அரசுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் (அரசுக்கு மீளளிப்பு)
L	-	காணி சுவீகரிப்பு வழக்குகள்
CE	-	அரச காணிகளின் உரிமையை மீளப்பெறல்
AA	-	ஒழுக்காற்று விடயங்கள்
AV	-	விமான சேவைகள் வழக்குகள்
CA/LT	-	தொழில் நியாய சபை வழக்குகள்
CA/MC	-	நீதவான் நீதிமன்ற வழக்குகள்

சிவில் பிரிவின் செயற்பாடு

விடயம்	திறக்கப்பட்ட கோவைகள்	முடிவுறுத்தப்பட்ட வழக்குகள்	எஞ்சியிருக்கும் கோப்புகள
E	325	65	260
FC	41	14	27
CA/CA	542	-	-
CA/HC	369	-	-
HRC	10	-	10
B	61	31	30
CA/NA	292	-	-
CA/DC	443	-	-
ARB	03	-	-
C	296	-	-
L	163	-	-
CE	41	-	-
AA	50	8	42
CA/LT	08	-	-
CA/MC	42	-	-
மொத்தம்	**2686**	**118**	**369**

சிவில் பிரிவினால் திறக்கப்பட்ட கோவைகளின் பெரும் எண்ணிக்கையான கோவைகள் அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படுகின்றது என்பதனை கவனிக்கவும்.

iii. அரச சட்டத்தரணிகள் பிரிவு

அரச சட்டத்தரணிகள் பிரிவிற்கு சிவில் பிரிவினால் திறக்கப்பட்ட வழக்குக் கோவைகள் கிடைக்கப் பெறும் அதன் பின்னர் இலங்கை முழுவதுமுள்ள சிவில் நீதிமன்றங்களில் இவர்கள் தோன்றுவர்.

சிரேஷ்ட அரச சட்டத்தரணி ஒருவர் மற்றும் அரச சட்டத்தரணி இருவர் அடங்கலாக 15 உத்தியோகத்தர்கள் அரச சட்டத்தரணி பிரிவில் உள்ளனர். இதற்கு மேலதிகமாக சிவில் வழக்குகளில் நெறிப்படுத்தல் வேலைகளை மேற்கொள்வதற்கு இலங்கை முழுவதுமான வலையமைப்பு அரச சட்டத்தரணிகள் (முன்னர் முடிக்குரிய வழக்கறிஞர்கள்) உள்ளனர். இப்பிரிவானது வருடாந்தம் பெரும் எண்ணிக்கையிலான வழக்குகளை கையாளுக்கின்றது. இந்த வருடம் 1712 சிவில் வழக்குகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

iv. உயர் நீதிமன்றப் பிரிவு

இது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் உயர் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்குகளை மட்டும் கையாள்வதற்கான ஒரு சிறப்புப் பிரிவாகும். மேலதிக மன்றாடியார் அதிபதியின் தலைமையின் கீழ் 11 உத்தியோகத்தர்களும் மற்றும் ஏனைய வகுப்பிலுள்ளோரும் கடமையாற்றுகின்றனர்.

இப்பிரிவானது 2014 ஆம் ஆண்டில் அடிப்படை உரிமைகள் அடங்களாக பெரும் எண்ணிக்கையான வழக்குகளை கையாண்டுள்ளது.

2014 ஆம் ஆண்டில் 392 வழக்குக் கோவைகள் திறக்கப்பட்டதுடன் அக் கோவைகளின் 80 உம் அதற்குமுன் திறக்கப்பட்ட 600 கோவைகள் அடங்கலாக 680 கோவைகளின் வழக்குகள் இவ் வருடத்தில் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

v. கூட்டுத்தாபனப் பிரிவு

அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் பல்வேறுபட்ட அரச சார்பான நிறுவனங்கள் என்பவற்றுக்கு அவர்களின் சட்டவிடயங்கள் தொடர்பில் நியாயமான கட்டன்களை அறவிட்டு உதவி செய்யும் நோக்குடன் இப்பிரிவானது 1990 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் 1885 வழக்குக் கோவைகள் திறக்கப்பட்டு 1751 வழக்குகள் முடிவுறுத்தப்பட்டுள்ளன.

கூட்டுத்தாபனப் பிரிவில் வகையீடு செய்யப்பட்டுள்ள விடயங்கள்

CA - அரச நிறுவனங்கள் எதிராளி அல்லது எதிர்வாதியாக உள்ள வழக்குகள்.

C - அரச நிறுவனங்கள் வழக்காளி அல்லது மேன்முறையீட்டாளராக உள்ள வழக்குகள்.

E - அறிவுரைக்கான கோவைகள்

BCL - உடன்படிக்கைகள்

ARB - நடுத்தீர்ப்பு

SPC - மாகாணச் சபை நியதிச் சட்டங்கள்

L - காணி சுவீகரிப்பு விடயங்கள்

WB - நீர் விநியோக சிட்டைககளில் கொடுப்பனவு செய்யாதவற்றை மீள பெறுவதற்கான வழக்குகள்.

கூட்டுத்தாபனப் பிரிவின் செயற்பாடு

விடயம்	திறக்கப்பட்ட கோவைகள்	முடிவுறுத்தப்பட்ட கோவைகள்	எஞ்சியிருக்கும் கோப்புகள
CA	1045	1085	2455
C	278	259	3281
E	218	146	591
BCL	56	53	43
ARB	08	22	17
FC	01	02	02
SPC	02	01	04
L	-	-	02
WB	277	183	594
மொத்தம்	**1885**	**1751**	**6989**

vi. சிறுவர் துஷ்பிரயோகப் வழக்குப் பிரிவு

சட்டமா அதிபரின் ஆலோசனைகளுக்காக அனுப்பப்பட்ட சிறுவர் துஷ்பிரயோக மற்றும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகள் தொடர்பான வழக்குகளை விரைவாக நிறைவேற்றுவதற்காக இவ்வலகானது 2004 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

சட்டமா அதிபா் திணைக்களமானது இவ்வழக்குகளைக் கையாள்வதற்கு 14 இளம் சட்டத்தரணிகளை நியமித்துள்ளது. அத்துடன் பதினான்கு துணையாதரவு பதவியினரும் உள்ளனா்.

2014 ஆம் ஆண்டு இவ்வலகானது பெரும் எண்ணிக்கையான வழக்குகளை கையாண்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் 4248 கோவைகள் திறக்கப்பட்டு அதில் 2188 கோவைகள் நிறைவு பெற்றுள்ளன.

vii. பொதுமக்கள் மனு அலகு

பொதுமக்களிடம் இருந்து பெறப்படும் மனுக்களுக்கு யாதேனும் நிவாரணம் வழங்கும் நோக்குடன் இம் மனுக்கள் இப்பிரிவுக்கு வழங்கப்படும். தற்போது இம்மனுக்களை கையாள்வதற்கு இத்திணைக்களத்தின் உதவி மன்றாடியாா் அதிபதி ஒருவரின் கீழ் பணிகள் முன்னெடுக்கபடுகின்றன.

மேற்கூறப்பட்ட 2014 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பிரிவினதும் செயற்பாடுகளை பின்வருமாறு சுருக்கமாக நோக்கலாம்.

கிளை	திறக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை	குற்றப்பகர்வுகள் அனுப்பப்பட்ட கோவைகள் எண்ணிக்கை	அறிவுறுத்தல் வழங்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை	விடுவிக்கப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை	பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட கோவைகள் எண்ணிக்கை
*சிவில் பிரிவு	2686	-	-	-	118
குற்றவியல் வழக்குப் பிரிவு	5496	2210	1304	870	3970
*அரச சட்டத்தரணிகள் பிரிவு	128	-	-	-	1712
உயர் நீதிமன்ற அலகு	392	-	-	-	680
கூட்டுத்தாபன பிரிவு	1885	-	-	-	1751
பெண்கள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோக வழக்குப் பிரிவு	4428	739	540	909	2188
பொது மக்கள் மனுப் பிரிவு	530	-	-	-	220

*சிவில் பிரிவினால் திறக்கப்பட்ட கோவைகளின் பெரும் எண்ணிக்கையானவை அரச சட்டத்தரணிகள் பிரிவினால் கையாளப்படும்.

viii. தாபனப் பிரிவு

தாபனப் பிரிவானது, திணைக்களத்தின் அனைத்து கடமைகளும் தடையின்றி நடைபெற திணைக்களரீதியாக மௌனமாக உதவி புரிகின்றது. இத்திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளைப் போன்று இப்பிரிவினரின் செயற்பாட்டை அளவீட்டு முறையில் குறிப்பிட முடியாது. ஆகவே தாபனப் பிரிவின் 2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரையிலான காலப்பகுதியின் செயற்பாடுகள் பின்வருமாறு.

- **ஆட்சேர்ப்பு, வெற்றிடங்களை நிரப்புதல் மற்றும் புதிய பதவிகளை உருவாக்கல்.**

சட்ட உத்தியோகத்தர்கள் :-

- சட்ட உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும் நோக்குடன் கீழ் காட்டபட்டுள்ளவாறு 190 புதிய பதவிகளை உருவாக்குவதற்கு நிதிப்பிரமாணம் 71இன் கிழ் முகாமைத்துவ சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுல்லது.

01. சிரேஷ்ட மேலதிக மன்றாடியார் அதிபதி	–	02
02. மேலதிக மன்றாடியார் அதிபதி	–	04
03. சிரேஷ்ட பிரதி மன்றாடியார் அதிபதி	–	09
(09 பிரதி மன்றாடியார் அதிபதி பதவிகளை இல்லாதொழித்தது)		
04. சிரேஷ்ட அரச சட்டவாதி	–	16
05. உதவி அரச சட்டவாதி	–	130
06. சிரேஷ்ட அரச சட்டத்தரணி	–	01
(அரச சட்டத்தரணி பதவிகளில் 01 இனை இல்லாதொழித்தது)		
07. கனிஷ்ட உதவி அரச சட்டத்தரணி	–	28

பொது முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை :-

பொது முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் போது நிர்வாக அமைச்சிடன் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

திணைக்கள பதவிகள்

- நூலகர் பதவிக்கான ஆட்சசேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- 28 திணைக்கள சுருக்கெழுத்தாளர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக திறந்த போட்டி பரீட்சை நடாத்தப்பட்டு அதன் பெறுபேற்றுக்கு அமைய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

சிற்றூழியர்கள்

- அலுவலர் சேவை அலுவலர் மற்றும் சாரதி சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு பொது நிர்வாக அமைச்சிடம் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது.

- காவற்காரருக்கான 07 பதவிகளுக்கான அட்சேர்ப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

- **லீவை கணணிமயப்படுத்தல்**

திணைக்களத்தின் அனைத்து அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் லீவானது பொருத்தமான ஆவணங்களில் பதியப்படுவதுடன் அதற்கு மேலதிகமான அனைத்து லீவுகளும் சிறப்பாக வடிவமாக்கப்பட்ட கணனி நிகழ்ச்சி நிரலின் கீழ் கணனி மயமாக்கப்பட்டுள்ளது. பதவி நிலை உத்தியோகத்தர் அவர்களது இணைய லீவு விண்ணப்பங்களை பொருத்தமான கண்காணிப்பு உத்தியோகத்தரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைக்கலாம். (எழுத்து மூலமான அங்கீகாரம் தேவைப்படும் ஏனைய லீவுகள் மற்றும் வெளிநாட்டு லீவு தவிர்ந்தது)

- **இடர் நிவாரணக் கடன் வழங்கல்**

இடர் நிவாரணக் கடனுக்கு விண்ணப்பித்தவர்களை நீண்ட காலத்திற்கு வைத்திருக்காது அதனை செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

2014.01.01 முதல் 2014.12.31 வரை இடர் நிவாரணக் கடனிற்கு விண்ணப்பத்தோடும் வழங்கப்பட்டமைக்குமான தரவுகள்

பதவி நிலை	விண்ணப்பங்களின் எண்ணிக்கை	கடன் வழங்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை
பதவியணியினர்	18	18
அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் ஏனைய சேவைகள்	42	42
காரியாலய உதவியாளர் சேவை	48	48
சாரதிகள்	14	14

2014.01.01 தொடக்கம் 2014.12.31 வரை இடர் நிவாரணக் கடனுக்கு ரூபாய் **8,626,695.00** அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

- **ஓய்வூதியக் கொடுப்பனவுகள்**

ஓர் உத்தியோகத்தர் அல்லது ஊழியர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் ஓய்வூதியத்திற்கான அனைத்து ஆவணங்களும் இத்திணைக்களத்தின் உத்தியோகத்தர்/ஊழியர் தேவையற்ற தாமதமின்றி அவரது ஓய்வூதியம் மற்றும்/ அல்லது

பணிக்கொடையினை பெற்று கொள்வதற்காக ஓய்வூதிய திணைக்களத்திற்கு காலதாமதங்கள் எதுவுமின்றி அனுப்பி வைக்கப்படும்.

அதன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற 08 ஊழியர்களின் ஓய்வூதியப் பணிக்கொடை 2014 ஆம் ஆண்டிலேயே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

- **பயிற்சி மற்றும் பௌதீக வளங்கள், வழங்குவதன் மூலம் மனித வள மேம்பாடு**

2014 ஆம் ஆண்டில் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் கற்கை நெறிகளில் முகாமைத்துவ உதவியாளர்கள் சேவையின் 08 உத்தியோகத்தர்கள், சாரதிகள் சேவையில் 07 அலுவலர்கள் காரியாலாய பணியாளர் சேவையின் 02 பேர் பங்குபற்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. இதற்கு மேலதிகமாக தமிழ் மொழி கற்கை நெறியில் முகாமைத்துவ உதவியாளர்கள் 07, பங்கேற்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் பலதரப்பட்ட நிறுவனங்கள் வழங்கும் சட்டத்துறை தொடர்பான புலமைப் பரிசில்களுகான சந்தர்ப்பங்கள் சட்ட உத்தியோகத்தர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

- **உட்கட்டமைப்பு அபிவிருத்தி**

  - நிர்மாணிக்கப்படவிருக்கும் 07 மாடிகளைக்கொண்ட புதிய கட்டிடம் நிர்மாணிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்று அதற்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.
  - மன்னார் மற்றும் வவுனியாவில் அரச சட்டவாதிகளுக்கான விடுதி நிர்மானிப்பதற்காக கட்டிட வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.
  - திணைக்களத்தில் காணப்படும் இடப்பற்றாக்குறை காரணமாக 05 மாடி கட்டடம் ஒன்று வாடகை அடிப்படையில் பெறப்பட்டுள்ளது.

2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான இலக்கு விபரங்கள்

தலைப்பு 14

நிகழ்ச்சித் திட்டம் 01

கருத்திட்டம் 01

2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான மீண்டுவரும் செலவினங்கள்

இலக்கு விபரங்கள்	ரவு செலவு திட்ட ஏற்பாடுகள்	தேறிய ஏற்பாடுகள்	மொத்த செலவினம்
தனிப்பட்ட கொடுப்பனவுகள்	249,500,000	268,700,000	268,586,540
ஏனைய மீண்டுவரும் செலவினங்கள்	200,420,000	228,020,000	227,701,995

2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான மூலதன செலவினம்

விடயமும் விடய இலக்கமும்	வரவு செலவு திட்ட ஏற்பாடுகள்	தேறிய ஏற்பாடுகள்	தேறிய செலவினம்
2001 - கட்டிடமும் நிர்மாணமும்	4,300,000	4,300,000	4,285,302
2002 - இயந்திரமும் இயந்திரத் தொகுதியும்	1,500,000	1,500,000	1,493,620
2003 - வாகனம் பழுது பார்த்தல்	3,500,000	3,500,000	3,499,945
2102 - தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும்	7,500,000	7,500,000	7,497,074
2103 - இயந்திரமும் இயந்திரத் தொகுதி கொள்வனவும்	2,500,000	2,500,000	2,499,979
2401 - பயிற்சியும் திறன் அபிவிருத்தியும்	6,000,000	19,000,000	18,914,468

2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான முற்பணக் கணக்குகள்

செலவினத்தின் உயர் எல்லை	பெறுமதியின் குறைந்தபட்ச எல்லை	கடன் மிகுதியின் உயர் எல்லை
23,000,000	12,000,000	90,000,000